திரு. ப. நெடுமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டிய இடங்களில், சித்தர்கள் வாழ்ந்த பழனி மலை இல்லை. பழனி மலையில் ஏற்கெனவே அங்கிருக்கக்கூடிய ஆலயத்தின் சார்பில் மூலிகைப் பண்ணை வைத்திருக்கிறார்கள். அதையும் விரிவுபடுத்தி அங்கே ஒரு மூலிகை ஆராய்ச்சி பண்ணையையும் நிறுவ அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இது இல்லாமல் வேறு சில இடங்களில் இந்த மூலிகைப் பண்ணைகளை வைத்துப் பயன் பெறும் வகையில் விரிவுபடுத்தலாம் என்று அரசு ஆராய்ந்து வருகிறது. அப்படி வருகையில் பழனி மலையில்கூட விரிவு படுத்தும் திட்டத்தின் விளைவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் ஏற்கெனவே இருக்கும் பண்ணையை யும் விரிவு படுத்த ஆராய வாய்ப்பு இருக்கும். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையின் அடிப்படையில் அரசு ஆராயும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லி மலையில் எந்தெந்த வகையான மூலிகை கள் கிடைக்கின்றன? என்னுடைய தொகுதியில் இராமாயண காலத்தில் சஞ்சீவி மூலிகை எனது தொகுதி அருகில் உள்ள சிறுமலையிலிருந்து எடுத்துச் சென்றதாகக் கூறுவார்கள். அப்படிப்பட்ட சஞ்சீவி மூலிகை அந்தப் பக்கத்தில் இருப்பதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இல்லை.

ஆட்டோரிக்ஷாவில் பயணிகள் எண்ணிக்கை.

*வினா எண். 45—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

ஆட்டோரிக்ஷாவில் 3 பேர் செல்வதற்கு அனுமதி வழங்க திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஆட்டோ ரிக்ஷாக்களில் 3 பயணிகளை ஏற்றிச் செல்ல அனுமதிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : நகராட்சிகள், கார்ப்பரேஷன்கள் போன்ற இடங்களில் ஓடுகின்ற ஆட்டோ ரிக்ஷாக்கள் பேரூராட்சிகளில், பேரூராட்சி வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டால் விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆட்டோ ரிக்ஷாக்களில் எவ்வளவு பேர்கள் பேகலாம் என்பதைப் பற்றியதுதான் கேள்வி, எனவே இதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் அதைப் பற்றி யோசிக்க முடியும்.

திரு. ரா. உமாநாத் : இப்போதே பல நகரங்களில் ஆட்டோ ரிக்ஷாக்களில் பெருவாரியாக மூன்று பேர்கள்தான் போய்க்கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு முன்பே சொல்லப்பட்ட காரணம் ஆக்சிடென்ட்ஸ் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அப்படி மூன்று பேர்கள் ஏறிப் போனதினால் ஏற்பட்ட ஆக்சிடன்ட்ஸ் பற்றி ஏதாவது கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லை என்று சொன்னால் சைக்கிள்களில் எப்படி டபிள்ஸ் போகலாம் என்பது லீகலைஸ் செய்யப்பட்டிருக்கிறதோ அதேபோல் ஆட்டோரிக்ஷாவிலும் மூன்று பேர்கள் செல்வதை லீகலைஸ் செய்ய விரைவில் முடிவெடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மூன்று பேர்கள் போன காரணத்தினால் ஆக்சிடன்ட்ஸ் எவ்வளவானது என்று கணக்கு இல்லை. அதனால் ஆகியது என்பதைத் தனியாக எடுக்க முடியாது. ஆட்களை ஏற்றிச்செல்லாமல் இருக்கும்போதே விபத்துக்கள் ஏற்படுகின்றன. மூன்று பேர்கள் ஏறிய காரணத்தால் ஆகியது என்று சொல்லமுடியாது. இருந்தபோதிலும் அது பற்றிப் பரிசீலிக்கப்படும். இரண்டு பேர்கள் சைக்கிள்களில் போக அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இரண்டு பேர்கள் அப்படிப் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அல்ல, கீழ்மட்டத்தில் இருக்கக்கூடிய ஏழை மக்கள் அந்த வசதியைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான் அது அனுமதிக்கப்பட்டது. இதனுடைய சூழ்நிலையைச் சிந்தித்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. எம். சின்னசாமி : ஆட்டோ ரிக்ஷாக்களில மூன்று பேர்களை ஏற்றிச் செல்ல அனுமதி அளிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே போல் டாக்சியிலும் ஐந்து பேர்களை ஏற்றிச் செல்ல அனுமதி அளிக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, ஆட்டோ ரிக்ஷாக்கள் பற்றியது.

திரு. அ. செல்வராஜன் : ஆட்டோ ரிக்ஷாக்களில் மூன்று பேர்களை ஏற்றிச் செல்வதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் அதன்படி இரண்டு பேர்களுக்குத்தான் கட்டப்பட்டிருக்கிறது. மூன்று பேர்களை ஏற்றிச் செல்ல அனுமதி தருவதாக இருந்தால் அந்தப் பெட்டியில் அதிகமாக அதாவது மூன்று பேர்கள் உட்காரக்கூடிய அளவில் வசதியோடு கட்ட அரசு உத்தர விடுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 10—7—1979-ல் புது டில்லியில் நடந்த போக்குவரத்து வளர்ச்சிக் குழுவில் ஆட்டோ ரிக்ஷாவில் 3 பயணிகளை ஏற்றிச் செல்ல மாநில அரசுகள் அனுமதி வழங்கலாம் என பரிந்துரைத்துள்ளது. 1940ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகளின் விதிகள், விதி 360-B (1)ன்படி 2 பயணிகளை ஏற்றிச்செல்லும் அமைப்புடைய ஒவ்வொரு ஆட்டோ ரிக்ஷாவிலும் இருக்கையின் நீளம் 120 செ.மீட்டருடக்கு மிகாமலும் 90 செ.மீட்டருக்குக் குறையாமலும், அகலம் 41 செ. மீட்டருக்கு குறையாமலும் இருக்க வேண்டும். மேற்கூறிய விதியின் துணைவிதி (2)ன்படி 4 பயணிகளை ஏற்றிச்செல்லும் அமைப்புடைய ஒவ்வொரு ஆட்டோரிக்ஷாவிலும் ஒவ்வொரு பயணிக்கும் பொதுவாக வசதியான 41 செ.மீட்டருக்கு குறையாத நீள அகலமுள்ள இருக்கைகள் எதிர் எதிராக செங்கோணத்தில் அமைக்கப் பட்டிருக்கவேண்டும். எனவே அதை வைத்து நடவடிக்கை எடுக்கும்போது, மூன்று பேர்கள் அனுமதிக்கும் நிலை வருமானால், அதற்கான கொள்ளளவை கொடுத்துத்தான் அனுமதிக்கப்படும்.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : ஆட்டோ ரிக்ஷாக்களில் மூன்று பேர்கள் போவதால் ஆக்சிடெண்ட்ஸ் ஏற்படுவதாகக் கூறப்பட்டது. கர்நாடகாவில் பெங்களூர் ஸிட்டியில் மினி டாக்ஸி என்று மூன்று பேர்கள் போகிற அளவிற்கு ஆட்டோ வடிவத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் ஏதாவது விடுவதற்கான ஆலோசனை அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினரின் யோசனையை மனதில்கொண்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : சைக்கிள்களில் இரண்டு பேர்கள் செல்லலாம் என்பது அது ஏழை மக்களுக்காகச் செய்யப்பட்ட வசதி என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோல் ஏழை எளியவர்கள் பயன்படுத்தக்கூடிய ஆட்டோ ரிக்ஷாக்களில் மூன்று பேர்களை ஏற்றிச் செல்ல அரசு அனுமதிப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அக்கேள்விக்கு ஏற்கனவே அமைச்சர் அவர்கள் பதில் அளித்துவிட்டார்கள்.